செ.வெ.எண்-19 நாள்-12.07.2019

# அரியலூர் மாவட்டத்தில் உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி

அரியலூர் மாவட்டத்தில் மருத்துவம், ஊரகநலப்பணிகள் மற்றும் குடும்ப நலம் துறையின் சார்பில் உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு, உறுதிமொழி ஏற்று, அரியலூர் அண்ணாசிலையிலிருந்து விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (12.07.2019) கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

உலக மக்கள் தொகை தற்போது சுமார் 751.52 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது. இந்தியாவின் மக்கள் தொகை 2011 கணக்கெடுப்பின்படி 122.01 கோடியாக இருந்தது. தற்போது சுமார் 134.25 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது. உலக நிலப்பரப்பில் 2.4 சதவீதம் உள்ள இந்தியா உலக மக்கள் தொகையில் 17.9 சதவீதம் உள்ளது. ஆண்டுதோறும் 1.57 கோடி இந்திய மக்கள் தொகை சுமார் 1.18 சதவீதம் அதிகரிக்கிறது.

உலகில் அளவற்ற மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாக விளை நிலங்களும், காடுகளும் அழிக்கப்படுகின்ற. இதன் விளைவாக பருவநிலை மாற்றம், நிலைத்தடி நீர்மட்டம் குறைதல், சுற்றுச்சூழல் சீர்கேடு, வறுமை, வேலைவாய்ப்பு இன்மை, உணவு மற்றும் குடிநீர் பஞ்சம் போன்ற பிரச்சனைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே, நாம் இருவர் நமக்கு ஒருவர் என்ற கோட்பாடோடு அனைவரும் கடைபிடித்திடுவோம்.

மேலும், அடிக்கடி பிள்ளைப்பேறு அல்லது கருக்கலைப்பு செய்வதால் தாய்க்கு இரத்தசோகை மற்றும் கருப்பை தொடர்பான நலக்குறைவு ஏற்படும். இது தாயின் உயிருக்கு ஆபத்தாக முடியலாம். இதனால் குடும்ப அமைதி கெடுவததோடு வறுமை நிலைக்கு தள்ளப்படுவர். எனவே, ஒரு மகப்பேறு குழந்தைக்கு பின் தாயோ அல்லது கணவரோ இருவரில் ஒருவர் கருத்தடை செய்துக்கொள்ள வேண்டும். கருத்தடை அரசு மருத்துவமனைகளில் இலவசமாக செய்யப்படுகிறது.

அரியலூர் மாவட்டத்தில் 2018ஆம் ஆண்டில் பிறந்த 10823 குழந்தைகளில் 1291 (11.9%) குழந்தைகள் 3ஆம் அதற்கு மேறப்பட்ட பிறப்பு வரிசையாக உள்ளது. இத்தகைய குழந்தை பிறப்பு தவிர்க்கப்பட வேண்டும். தம்பதியருக்கு குடும்ப நலம் குறித்து தெளிவு ஏற்படுத்துவது அவசியமாகும்.

மக்கள் தொகை பெருக்கத்தை கட்டுப்படுத்த, திருமண வயது பெண்ணுக்கு 21க்கு மேல் என்பதை தவறாமல் கடைபிடிக்க வேண்டும். ஆணோ, பெண்ணோ குடும்பத்திற்கு ஒரு குழந்தை போதும், ஆண் / பெண் வேறுபாடு கருதக்கூடாது, ஆணுக்கு நிகராக பெண் குழந்தைகளுக்கு கல்வி அளிக்க வேண்டும். தற்காப்புடன் வாழ வழி காணவேண்டும், அளவான குடும்பம் அமைக்க, தம்பதியர் சுயமாக சிந்தித்து முடிவெடுக்க வேண்டும், வரதட்சணையை ஒழிக்க அனைவரும் முன்வர வேண்டும் மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

பின்னர், மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற உலக மக்கள் தொகை தின கருத்தரங்கில், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சார்பாக திறன் வாரம் 08.07.2019 முதல் 12.07.2019 வரை நடத்தப்பட்டு, பல்வேறு போட்டிகளில் வெற்றிப்பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் பரிசுகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், இணை இயக்குநர் (நலப்பணிகள்) மரு.இளவரசன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.வீ.சி.ஹேமசந்த்காந்தி, துணை இயக்குநர் (குடும்ப நலன்) மரு.சிவபிரகாசம் உஷா, அரியலூர் அரசு தலைமை மருத்துவமனை மருத்துவ அலுவலர் மரு.ரமேஷ், திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம்) முத்துலெட்சுமி, மாவட்ட சமூக நல அலுவலர் அன்பு குலோரியா, புள்ளியியல் உதவி ஆய்வாளர் (குடும்ப நலன்) கோடீஸ்வரன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் எகசானலி மற்றும் மருத்துவர்கள், கல்லூரி பேராசிரியர்கள், பள்ளி, தொழிற்பயிற்சி நிலை ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**